# ஹெல்த்பிரீனர் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி: சென்னையில் அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்பு

சென்னை, செப். 29-

உடல்நல பராமரிப்புத்துறையில் சிறந்த தொழில்முனைவோரை அங்கீகரிக்கும் வகையில் லெக்ஸா சார்பில் லீ ராயல் மெரிடியன் ஹோட்டலில் சென்னையில் கடந்த 22-ம்தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் ஹெல்த்பிரீனர் விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் பல்துறைகளை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு விருது பெற்றவர்களை கவுரவித்தனர். சிறப்பு விருந்தினர்களாக துபாய் ஜுமேரா லைப் ஸ்டைல் நிர்வாக இயக்குநர் டாக்டர் முகமது இப்ராஹிம் அல் ஹாஜ், தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன், புதுச்சேரி சுங்க இலாகா தலைமை ஆணையர் எம்.வி.எஸ் சவுத்ரி, மலேசிய தூதரக வர்த்தக ஆணையர் வான் அஹ்மத் தர்மிசி வான் இட்ரிஸ், லெக்ஸாவின் இணை நிறுவனர் டாக்டர் ஹேமமாலினி, மனித உரிமைகள் ஆணைய செயலாளர் விஜயகார்த்திகேயன் ஐ.ஏ.எஸ், இந்தியாவுக்கான செஷெல்ஸ் கவுரவத்தூதர் சேஷா சாய், இந்திய -ஐக்கிய அரபு எமிரேட் சங்கத்தலைவர் ஸ்ரீதேவி அருணாச்சலம் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

லெக்ஸா குழு 2022-ம் ஆண்டுக்கான ஹெல்த்பிரீனூர் விருதுகளுக்கு 500-க்கும் மேற்பட்ட பரிந்துரைகளைப் பெற்றது. அவற்றில் 25 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு விருது, பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி கவுரவிக்கப்பட்டதுடன், அவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் சமூகத்திற்கு அவர்கள் ஆற்றிய அயராத சேவையைப் பற்றி பேசுவதற்கான வாய்ப்பும் இந்த நிகழ்ச்சியில் கிடைத்தது.